

# சீறத்துன்னபி صلى الله عليه وسلم

## நாள் 3

# இன்றைய தலைப்புகள்:

- நபி (ஸல்) அவர்களின் பரம்பரை

  அ. இப்ராஹீம் (அலை), இஸ்மாயில் (அலை)

  ஆ. இஸ்மாயில் (அலை) முதல் மக்கத்து குறைஷிகள் வரை

- நபி (ஸல்) அவர்களுக்கு முன்பிருந்த அரேபியா & சிலை வழிபாட்டின் தோற்றம்

- அம்ர் இப்னு லுஹாய் என்பவனின் வரலாறு தரும் பாடங்கள்

## பகுதி 1: நபி (ஸல்) அவர்களின் பரம்பரை:

### அ. இப்ராஹீம் (அலை), இஸ்மாயில் (அலை)

- ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரு நபி அனுப்பப்பட்டுள்ளார் என்பதை குர்ஆன் உறுதிப்படுத்துகிறது. ‘‘அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் வராத எந்தச் சமுதாயத்தவரும் (பூமியில்) இல்லை.’’ – ஸூரா ஃபாத்திர் (35:24). அரேபியர்களுக்கு அனுப்பப்பட்ட நபிமார்கள் இப்ராஹீம் (அலை) மற்றும் இஸ்மாயில் (அலை).

- இப்ராஹீம் (அலை) அவர்களும் இஸ்மாயில் (அலை) அவர்களும் அல்லாஹ்விடம் தங்களது சந்ததிகள் பற்றி கேட்ட துஆ: ‘‘எங்கள் இறைவா! எங்கள் சந்ததியினரிடம் உன்னுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக் கொடுத்து, அவர்களைத் தூய்மைப்படுத்தக் கூடிய ஒரு தூதரை அவர்களிலிருந்தே உருவாக்கி அருள்வாயாக! நிச்சயமாக நீயே வல்லமை மிக்கவனாகவும், பெரும் ஞானமுடையோனாகவும் இருக்கின்றாய்’’. – ஸூரா அல்பகரா (2:129)

- இப்ராஹிம் (அலை) அவர்களுக்குப் பிறகு முஹம்மது நபி (ஸல்) அவர்களைத் தவிர மற்ற அனைத்து நபிமார்களும் அவர்களுடைய மகன் இஸ்ஹாக் (அலை) அவர்களின் சந்ததியிலிருந்து வந்தவர்கள். இந்த துஆவின் விளைவாக அவர்களது மற்றொரு மகன் இஸ்மாயில் (அலை) அவர்களிடமிருந்து வந்தவர்கள் தான் முஹம்மது நபி (ஸல்) அவர்கள்.

- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘நான் என் தந்தை இப்ராஹீம் (அலை) அவர்களின் துஆவின் மூலம் வந்தவன்; நான்தான் ஈஸா (அலை) முன்னறிவித்த மகிழ்ச்சியான செய்தி. (இப்ன் இஸ்ஹாக்)

- இப்ராஹீம் (அலை) ஈராக்கில் உள்ள ‘உர்’ என்ற பகுதியைச் சேர்ந்தவர்கள்.

- ஒரு முறை இப்ராஹீம் (அலை) தன் மனைவி சாரா அம்மையாருடன் எகிப்துக்குப் பயணம் செய்தார்கள். அந்நாட்டு மன்னன் ஃபிர்அவ்ன், இப்ராஹீம் (அலை) மனைவிக்கு தீமை செய்ய முயன்றான். ஆனால், அல்லாஹ் அவர்களைக் காப்பாற்றினான். மன்னன் ஃபிர்அவ்னும் தன் குற்றத்தை உணர்ந்து கொண்டான்.

- சாரா அம்மையாரின் கருணையை அங்கீகரிப்பதற்காக, ஃபிர்அவ்ன் தனது

மகள் ஹாஜராவை, சாரா அம்மையாருக்கு சேவகம் செய்ய அன்பளிப்பாக வழங்கினான்.

- சாரா அம்மையாருக்கு குழந்தைகள் இல்லை. அதனால், தனது சேவகர் ஹாஜராவை இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார்கள்.

- ஹாஜரா அம்மையாருக்கு பிறந்த குழந்தைதான் நபி இஸ்மாயீல் (அலை).

- ஹாஜரா அம்மையார் மற்றும் இஸ்மாயீல் (அலை) அவர்களுடன் சேர்ந்து வாழ்வதை சாரா அம்மையார் விரும்பவில்லை.

- ஒரு நாள் இப்ராஹீம் (அலை) அவர்கள் ஹாஜரா அம்மையார் மற்றும் குழந்தையாக இருந்த இஸ்மாயீல் (அலை) ஆகிய இருவரையும் ஒரு பயிர் விளையாத பள்ளத்தாக்கு (தற்போதைய மக்கா நகர்) பகுதிக்கு அழைத்துச் சென்று அங்கே விட்டு விட்டார்கள். பின்பு இப்ராஹீம் (அலை) அவர்கள் தற்போதைய பாலஸ்தீனம் என்று அழைக்கப்படும் நாட்டில் உள்ள தனது வீட்டிற்குத் திரும்பினார்கள்.

- ஹாஜரா அம்மையார் மற்றும் இஸ்மாயீல் (அலை) அவர்கள் தங்களது தண்ணீர் தேவைக்காக தேடியபோது, ஹாஜரா அம்மையார் ஸஃபாவுக்கும் மர்வாவுக்கும் இடையே ஓடிய புகழ்பெற்ற சம்பவம் நடந்தது. மேலும் அல்லாஹ் அவர்களுக்கு ஜம்ஜம் தண்ணீரைக் கொடுத்தான். இந்த தண்ணீர் இன்று வரை அதே இடத்தில் இருந்து வெளியேறி வருகிறது.



- பள்ளத்தாக்கில் தண்ணீர் இருப்பதால், பயணிகள் மக்காவில் நின்று இளைப்பாற தொடங்கினர், ஜுர்ஹும் என்ற பழங்குடியினர் ஹாஜரா அம்மையார் அனுமதியுடன் மக்காவில் குடியேறினர். இவ்வாறாக மக்கள் மக்கா மண்ணில் வசிக்கத் தொடங்கினர்.


- இப்ராஹீம் (அலை) அவர்கள் ஹாஜரா அம்மையார் மற்றும் இஸ்மாயீல் (அலை) அவர்களை சந்திப்பதை வழக்கப்படுத்திக் கொண்டார்கள். அவ்வாறு ஒருதடவை சந்திக்கும்போது தான், தனது இளம் மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களை பலியிடும் கனவைக் கண்டார்கள்.

- இந்த சம்பவத்தை அல்லாஹ் மிக அழகாக இவ்வாறு குறிப்பிடுகிறான்: ''பின்பு (இஸ்மாயீல்) தன் தந்தையுடன் நடமாடக்கூடிய வயதை அடைந்த போது இப்ராஹீம் கூறினார்: 'எனதருமை மகனே! நான் உன்னை அறுத்து பலியிடுவதாக கனவு கண்டேன். இதைப்பற்றி உம் கருத்து என்ன என்பதைச் கூறுவீராக!'. அதற்கு அம்மகன் கூறினார்: 'எனதருமைத் தந்தையே! நீங்கள் ஏவப்பட்டபடியே செய்யுங்கள். அல்லாஹ் நாடினால், என்னை நீங்கள் பொறுமையாளர்களில் ஒருவனாக காண்பீர்கள்.'' – ஸூரா அஸ்ஸாஃப்ஃபாத் (37:102)

- மேலும் அல்லாஹ் கூறுகிறான்: இவ்வாறாக, அவ்விருவரும் இறைவன் கட்டளைக்கு முற்றிலும் வழிப்பட்டு, இப்ராஹீம் தன் மகனைப் பலியிட முகம் குப்புறக்கிடத்திய போது, நாம் அவரிடம், ''இப்ராஹீமே, நிறுத்திக்கொள்ளுங்கள்! நிச்சயமாக நீர் கண்ட கனவை மெய்ப்படுத்தி விட்டீர்! நன்மை செய்வோருக்கு நாம் இவ்வாறே கூலி கொடுத்திருக்கிறோம். நிச்சயமாக இது உண்மையான ஒரு பெருஞ்சோதனையாகும்''. – ஸூரா அஸ்ஸாஃப்ஃபாத் (37:103-106)

- அல்லாஹ் தனது மகனுக்கு பதிலாக ஓர் ஆட்டை பலியிடவைத்து, இப்ராஹீம் (அலை) அவர்களின் அந்தஸ்தை உயர்த்திவிட்டான். அல்லாஹ் கூறுகிறான்: ''ஆயினும், நாம் ஒரு மகத்தான பலியைக் கொண்டு அவருக்குப் பகரமாக்கினோம். இன்னும் அவரின் அந்தஸ்தை பிற்காலத்தவருக்கு (ஒரு ஞாபகார்த்தமாக) விட்டு வைத்தோம். இப்ராஹீம் மீது ஸலாம் உண்டாவதாக!'' – ஸூரா அஸ்ஸாஃப்ஃபாத் (37:107-109)

- மற்றொரு சமயத்தில் இப்ராஹீம் (அலை) மக்காவிற்கு வருகை தந்த போது, அவர்களும், அவர்களது மகன் இஸ்மாயீல் (அலை)மும் இணைந்து கஃபாவைக் கட்டினார்கள்.



- கஃபாவைக் கட்டிய சமயத்தில் அவர்கள் இவ்வாறு பிரார்த்தித்தார்கள்: ''எங்கள் இறைவனே! எங்கள் இருவரையும் உன்னை முற்றிலும் வழிபடும் முஸ்லிம்களாக்குவாயாக! எங்கள் சந்ததியினரிடமிருந்தும் உன்னை முற்றிலும் வழிபடும் ஒரு கூட்டத்தினரை (முஸ்லிம் சமுதாயத்தை) ஆக்கி வைப்பாயாக! நாங்கள் உன்னை வழிபடும் வழிகளையும் அறிவித்தருள்வாயாக! எ ங்களைக் கருணையுடன் நோக்கி எங்கள் பிழைகளை மன்னிப்பாயாக! நிச்சயமாக நீயே மிக்க மன்னிப்போனும், அளவிலா அன்புடையோனாகவும் இருக்கின்றாய்.'' – ஸூரா அல்பகரா (2:128)

- இவ்வாறாக இப்ராஹீம் (அலை) தனது மகன் இஸ்மாயீல் (அலை)முடன் சேர்ந்து ஏகத்துவத்தை அதாவது இஸ்லாத்தை அரேபியாவில் நிறுவினார்கள்.

- பின்னர் அல்லாஹ்வின் கட்டளைக்கு இணங்க, இப்ராஹீம் (அலை) அவர்கள் மக்காவிற்கு புனிதப் பயணம் மேற்கொள்ள மக்களை அழைத்தார்கள்; இவ்வாறாக ஹஜ் யாத்திரை என்ற கடமையை நிறுவினார்கள்.

- அவர்கள் மக்காவை ஒரு ஹரம் (புனிதமானது) என்று அதிகாரபூர்வமாக முடிவு செய்தார்கள். இது ஹராம் (அதாவது தடைசெய்யப்பட்டது) என்ற மூல வார்த்தையிலிருந்து வந்தது. மற்ற இடங்களில் செய்யப்படும் வேட்டையாடுதல், மரங்களை வெட்டுதல் போன்ற சில சாதாரண ஹலால் செயல்கள் இந்த

புனித பூமியில் ஹராம் என்று கருதப்படும்.

## ஆ. இஸ்மாயில் (அலை) முதல் மக்கத்து குறைஷிகள் வரை

- மக்காவில் வசித்து வந்த ஜுர்ஹும் கோத்திரத்தைச் சேர்ந்த பெண்களில் ஒருவரை இஸ்மாயீல் (அலை) மணந்தார்கள்.

- இஸ்மாயீல் (அலை) அவர்களுக்கு பன்னிரண்டு மகன்கள் இருந்தனர். பின்னர் அவர்கள் மக்காவில் வசிக்கும் பன்னிரண்டு கோத்திரங்களாக உருவாகினார்கள். அம்மக்கள் அரேபிய தீபகற்பம் முழுவதும் பரவி வாழ்ந்து வந்தனர்.

- இஸ்மாயீல் (அலை) அவர்களின் மகன்களில் ஒருவர் கிதார். அவருடைய சந்ததிகள் மக்காவில் நீண்ட காலமாக வாழ்ந்து வந்தனர்.


- இந்த சந்ததியில் அத்னான் என்ற ஒரு முக்கிய நபர் தோன்றினார்.

- முஹம்மது நபி (ஸல்) முதல் அத்னான் வரையிலான பரம்பரை நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுக்கு இடையே மொத்தம் 21 தலைமுறைகள் உள்ளன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களது வம்சாவளியைப் பற்றி பேசும் போதெல்லாம் அத்னான் வரை செல்வார்கள். அதற்குமேல் அவர்கள் சென்றதில்லை.

- அத்னானின் பரம்பரையில் இருந்து, பல பழங்குடியினர் வந்தனர். அவர்களில் மிகவும் பிரபலமானது கினானா பழங்குடி. கினானா குலத்திலிருந்து வந்த ஃபிஹ்ர் என்பவர், மற்ற பழங்குடியினர்களை ஒன்று சேர்த்த பெருமைக்குரியவர். அவர்தான் குரைஷி குலத்தை நிறுவியவர்.

- குரைஷிகளில் மிக முக்கியமானவர் ஹாஷிம். மேலும் ஹாஷிமின் குடும்பத்திலிருந்துதான் அல்லாஹ் நமது அன்புக்குரிய முஹம்மது நபி (ஸல்) அவர்களை இறுதித் தூதராகத் தேர்ந்தெடுத்தான்.

- கீழேயுள்ள விளக்கப்படம் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வம்சாவளியைக் காட்டுகிறது.


இப்ராஹீம்
இஸ்மாயீல்
அத்னான்
மாயித்
நிஜார்
முத்தார்
இல்யாஸ்
முத்ரிகாஹ்
குஸைமா
கினானா
அல்நாத்ர்
மாலிக்
ஃபிஹ்ர்
காலிப்
லுஅய்
காப்
முர்ரா
கிலாப்
குஸைய்
அப்துல் மனாஃப்
ஹாஷிம்
அப்துல் முத்தலிப்
பாட்டனார்
அப்துல்லாஹ்
தந்தை
முஹம்மது ﷺ

## பகுதி 2: நபி (ஸல்) அவர்களுக்கு முன்பிருந்த அரேபியா & சிலை வழிபாட்டின் தோற்றம்

- நீண்ட காலமாக அரேபியர்கள் இப்ராஹீம் (அலை) மற்றும் இஸ்மாயீல் (அலை) அவர்களின் மதத்தில் இருந்தனர். ''அல்லாஹ் ஒருவனே'' என்ற அடிப்படை நம்பிக்கையை பராமரித்து வந்தனர்.

- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருவதற்கு சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு வரை இப்படித்தான் இருந்தது.

- அந்த நேரத்தில், அம்ர் இப்னு லுஹாய் அல் குஸாயீ என்பவன் தோன்றி இஸ்மாயீல் (அலை) அவர்களின் தீனை மாற்றினான்.

- இந்த அம்ர் இப்னு லுஹாய், அவனுடைய நீதி, தொண்டு, பக்தி ஆகியவற்றின்மூலம் அரேபியர்களிடையே ஒரு முக்கிய ஆளுமையாகத் திகழ்ந்தான். இதனால் அந்தப் பழங்குடியினர்கள் அவனை நேசித்து அவனுக்கு கீழ்ப்படிந்து நடந்தனர்.

- அவன் ஒருமுறை சிரியாவிற்கு பயணம் சென்றபோது, அங்கு அமலேக்கிய நாகரிகம் மிகவும் சக்திவாய்ந்ததாக இருப்பதைக் கண்டான். மேலும் அந்த தேசம் ஒரு சக்திவாய்ந்த வல்லரசாக இருந்தது.

- அவன் அங்குள்ள மக்கள் சிலைகளை வணங்குவதைக் கண்டான். அந்த மக்கள், ''இந்த சிலைகள்தான் தங்கள் வலிமைக்கும், சக்திக்கும் ஆதாரம்'' என்று சொன்னார்கள்.

- அம்ர் இப்னு லுஹாய் தன்னுடன் 'ஹுபல்' என்று அழைக்கப்படும் ஒரு சிலையை கொண்டு வந்து, அதை கஃபாவின் முன் வைத்துவிட்டான். இப்படியாக அரேபியாவில் சிலை வழிபாடு (அல்லது உருவ வழிபாடு) தொடங்கியது.

- சிலைகள் தங்கள் சார்பாக அல்லாஹ்விடம் பரிந்து பேசும் என்ற நம்பிக்கையை இந்த உருவ வழிபாடு உருவாக்கி விட்டது.

- இறுதியில், மக்கள் சிலை வணக்கத்தின் மூலம், சிலைகளுக்காக யாத்திரை செல்லவும், அதற்கு நரபலி செலுத்தவும், அதற்குமுன் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கவும் வழிவகுத்தது.

மேலும் மூடநம்பிக்கைகள் வேகமாக பரவியது.

- மக்காவாசிகள் கஃபா மற்றும் முழு ஹராமின் பாதுகாவலர்களாக இருந்ததால், உருவ வழிபாடு மற்றும் மூடநம்பிக்கைகள் மிக விரைவில் அரேபியா முழுவதும் பரவியது.



## பகுதி 3: அம்ர் இப்னு லுஹாய் என்பவனின் வரலாறு தரும் பாடங்கள்

- அம்ர் இப்னு லுஹாய் என்ற ஒரு தனி மனிதரால் இப்ராஹீம் (அலை) அவர்களின் மதத்தை மாற்றி, இப்பகுதியின் கலாச்சாரம் மற்றும் நம்பிக்கைகளில் இவ்வளவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தது என்பதைப் புரிந்துகொள்வது ஆச்சரியமான ஒன்று.

- சமூகத்தில் ஊழல் எவ்வாறு பரவியது என்பதைப் பற்றி சிந்திக்க இங்கே நாம் அறிந்துகொள்ளவேண்டிய சில விபரங்கள்:

- சிரியாவின் அமலேக்கியர்கள் மிகவும் சக்திவாய்ந்தவர்களாக இருந்ததால், அவர்கள் செய்யும் செயல்கள் எல்லாம் சரியாக இருக்க வேண்டும் என்று அம்ர் இப்னு லுஹாய் நம்பினான். எனவே, அவன் உருவ வழிபாட்டை குருட்டுத்தனமாக ஏற்றுக்கொண்டு அதைத் தம் மக்களிடம் கொண்டு வந்தான்.

- குஸாஃஹ் கோத்திரத்தின் தலைவராக இருந்த அம்ர் இப்னு லுஹாய்யை

அவருடைய மக்கள் மிகவும் நேசித்தார்கள். அவன் செய்வதை உடனடியாக பின்பற்றினார்கள்.

- இப்ராஹீம் (அலை) வாழ்கைக்குப்பின் நீண்ட காலம் கடந்த பிறகு, அவர்கள் பரப்பிய அசல் இஸ்லாம் மதம் நீர்த்துப்போகிவிட்டது.

- மதம் பற்றிய அறியாமை பொதுவாக மக்களிடையே நிலவியது. அவர்கள் புதிய கண்டுபிடிப்புகளையும், மூடநம்பிக்கைகளையும் உள்வாங்கத் தொடங்கினர்.

- இவ்வாறாக உருவ வழிபாடு ஒவ்வொரு வீட்டிலும் நுழைந்து, இஸ்லாமியத்திற்கு முந்தைய அரேபியாவின் முக்கிய மதமாக மாறியது.

- ஸஹீஹுல் புகாரீயில் கூறப்பட்டுள்ளது: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ''அம்ர் இப்னு லுஹாய் நரக நெருப்பில் தனது குடல்கள் வெட்டப்பட்ட நிலையில் சுற்றித் திரிவதை நான் கண்டேன். அவன்தான் இஸ்மாயீல் (அலை) மதத்தை முதலில் மாற்றியவன்''.